முருகப்பெருமான் துணை

**மகான் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**20.04.2021**, செவ்வாய்கிழமை

1. கலித்துன்பம் போக்கவந்த
கருணாமூர்த்தியான அரங்கனே
பழிசேரும் என்று கருதா
பாவச் செயல்புரியும் மக்களை
2. மக்களை தேற்றி காப்பேன்
மாற்றி அவர்களையும் கலியில்
தேக்கமற ஞானி ஆக்குவேனென
தெய்வ பலமாக வந்த தேசிகா
3. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் யோகபிரசன்ன ஆசி
ஆசிதனை பிலவ தகர் திங்கள்
அறிவிக்க சப்தம திகதி குசன் வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 7ம் நாள், 20.04.2021 செவ்வாய்கிழமை)
4. வாரமதில் ஐயடிகள் காடவர்கோன் நாயனாரும்
வழங்குவேன் உலக நலம் காண
சோரமுள்ள மக்கள் படையை
சுத்தநெறி எனும் ஞானம் கொண்டு
5. கொண்டுமே மாற்றம் செய்யவந்த
குருவரங்கன் வழி ஏற்று
தொண்டர்களாகி மக்கள் வர
தீவினை விலகி ஏற்றம் அடைவர்
6. ஏற்றமான ஞான வழி தரும்
ஏழாம்படைவீடு நோக்கிவர
மாற்றம் தானாக நடந்து
மாண்புள நெறிமுறை வளர்ந்து
7. வளர்ந்து ஞானவான்கள் எனும்
வல்லமை பெற்று வளருவதுடன்
தளர்விலா தேட்டு தனவளம்
தன்னார்வ சேவைநிலை கூடி
8. கூடியே வினை இல்லாத
குருவருள் தன்மை நிறைந்த
ஈடேற்றம் இயல்பாய் கண்டு
இவ்வுலகில் யாவரும் தேறி
9. தேறியே அரங்கன் ஆசிபட
தெய்வ நெறி கண்ட மக்கள்
மாறியே கலிக் கொடுமைகளை
மாற்றும் சக்திமிக்க ஞானிகள் ஆகி

10. ஆகியே தேறுவர் உலகில்
அழியாமை பெற்று இனிதே
அகில மாற்றம் செய்து நன்கு
ஆறுமுகனார் சக்திகள் ஆகி

11. ஆகியே ஞான ஆட்சி தருவதுடன்
ஆபத்தில்லா ஞானயுகம் படைப்பர்
மகிழவே மாதவசியை ஏற்றுவாரீர்
மொழிந்திட்ட யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—